# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

<u>ஆணை நாள் – **16.04.2025**</u>

**<u>முன்னிலை</u>**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண். NC.452/F/2024 (SA.23124/F/2022)</u>

திருமதி சே. பியூலாகரோலின் — மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / உதவி மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், — பொது அதிகார அமைப்பு
(கும்பகோணம்) லிமிடெட்,
எண்.27, புகைவண்டி நிலைய புதுச்சாலை,
கும்பகோணம் - 612 001.

<u>பார்வை:</u>

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 24.05.2022 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 07.07.2022 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 16.08.2022 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 29.12.2022 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 06.05.2024 |
| மனுதாரர் NC மனு தாக்கல் செய்த நாள் | 29.06.2024 |

*******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய காணொளி காட்சி வாயிலான விசாரணையில் மனுதாரர் திருமதி சே. பியூலாகரோலின் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு K. கோபாலகிருஷ்ணன், உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து

கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம் என்பவருக்கு பதிலாக திரு P. நாராயணன், சிற்பு நிலை உதவியாளர் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், கும்பகோணம், தலைமை அலுவலகத்தின் மூலம் கடந்த 2012-ஆம் ஆண்டு முதல் இன்றைய கடிதத்தேதி வரை நிரப்பப்பட்டுள்ள கருணை அடிப்படையிலான நிரந்தர பணி இடங்களின் எண்ணிக்கை மற்றும் பதவிகளின் விவரங்கள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை உரிய ஆதாரத்துடன் மற்றும் 20 ஆண்டுகளில் நிரப்பப்பட்டுள்ள தற்காலிக பணியிடங்களின் எண்ணிக்கை, பதவிகளின் பெயர் மற்றும் கடைசியாக நிரப்பப்பட்ட இறந்தவர்களின் வாரிசுக்கான கருணை அடிப்படையிலான பணியிடங்கள் நிரப்பப்பட்ட ஆண்டு உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 10 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு (SA.23124/F/2022) 06.05.2024 அன்று மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாணையத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***“ 4. அன்றைய 06.05.2024) விசாரணையின் முடிவில், மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு அறிக்கையினை அனுப்பிவைத்து, மனுதாரர் அவற்றை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட அறிக்கையின் நகல்கள் ஆகியவற்றை இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது”.***

4. இந்நிலையில், இவ்வாணையத்தால் 06.05.2024 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையை பொதுத் தகவல் அலுவலர் நிறைவேற்றவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு முழுமையான தகவல்களை வழங்கவில்லை எனவும் தெரிவித்து, மனுதாரர் 29.06.2024 தேதியிட்டு இவ்வாணையத்தில் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனு இன்று (16.04.2025) காணொளி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு க.எண்.146/பபி-இ4/தஅபோக(கு)கும்ப/2022 நாள் 15.04.2025 தேதியிட்டு பதிவுத்தபாலின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் தாக்கல் செய்தார். ஆணையம் அதனை கவனமுடன் பரிசீலனை செய்கையில், பொதுத்தகவல் அலுவலரால்

மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானது எனக் கருதி, மனுதாரரின் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.NC.452/F/2024 (SA.23124/F/2022)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் / உதவி மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்,
(கும்பகோணம்) லிமிடெட்,
எண்.27, புகைவண்டி நிலைய புதுச்சாலை,
கும்பகோணம் - 612 001.

**<u>வழக்கு எண்.NC.452/F/2024 (SA.23124/F/2022)</u>**
**<u>மனுதாரர்</u>**
திருமதி சே. பியூலாகரோலின்,
எண்.16/69, மிஷன் தெரு,
வெளிப்பாளையம், தரங்கம்பாடி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்.

Copy to: File.
SNPS / 22.04.2025